# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விகாரி, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு 2051

## 2020 பிப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்."*

ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கேற்ற கருவிகளோடு, காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி பெறுவதற்கு முடியாத கடினமான செயல் என்று எதுவுமில்லை.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**36—**

### சதுப்பு நிலக் காடுகள்

*39063—**திரு. செ. ராஜேஷ் குமார்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களில் சதுப்பு நிலக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2020 பிப்ரவரி 18

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேங்காய்பட்டினம், குளச்சல், முட்டம், இராஜாக்கமங்கலம், மணக்குடி முதலிய பகுதிகள் ஆற்று நீரும், கடல் நீரும் ஒன்றுசேரும் பகுதியாக அமைந்திருக்கின்றன. ஆற்று நீரும், கடல் நீரும் ஒன்றுசேரும் முகத்துவாரப் பகுதிகளில் தற்போது பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்–development activities–நடைபெற்று வருவதால் எஞ்சிய பகுதிகளில் Mangrove forests என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சதுப்பு நிலக் காடுகள் வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 13 கடலோர மாவட்டங்கள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 72 கி.மீ. நீளக் கடற்கரையை உள்ளடக்கிய 52 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. தொடர்ந்து ஏற்படுகின்ற கடல் சீற்றம், ஆழிப் பேரலை போன்றவற்றால் மீனவர்களுடைய குடியிருப்புகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து இருக்கின்றார்கள். எனவே, எங்களுடைய மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் Mangrove forests என்றழைக்கப்படுகின்ற கடல் அலைகளைத் தடுக்கின்ற சதுப்பு நிலக் காடுகளை அமைத்துத் தருவதால், அங்கிருக்கக்கூடிய மக்கள் பேரலையிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கப்படுவார்கள். ஏற்கெனவே, 2004 ஆம் ஆண்டு மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் விளைவாகவும், 2017 ஆம் ஆண்டு ஒகி புயல் காரணமாகவும் நூற்றுக்கணக்கான மக்கள் அன்றைக்கு மரணமடைந்தார்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தின் கடலோரப் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்காகவும், குடியிருப்புப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காகவும், சதுப்பு நிலக் காடுகள் மிகவும் அவசியம். Mangrove காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே தமிழக அரசு 2008 ஆம் ஆண்டு சென்னையில்

2020 பிப்ரவரி 18]

Mangrove காடுகளை வளர்த்திருக்கின்றது. அதுபோல் எங்களுடைய மாவட்டத்தில் இன்றைக்கு மணக்குடி பகுதியில் Mangrove காடுகள் இருக்கின்றன. மீன் வளத் துறையின் சார்பாக ரூ.10 கோடி செலவில் அங்கே eco park அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக அந்த Mangrove காடுகளை அழிக்கிறார்கள். ஆகவே, Mangrove காடுகள் அழியாதவண்ணம் பாதுகாத்து, எங்களுடைய பகுதிகளில் மக்களுடைய பாதுகாப்பிற்காக Mangrove காடுகளை வளர்க்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்று வேகத்தினைத் தடுக்கவும், அங்கிருக்கின்ற பொதுமக்களின் வீடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். முதலில் சொன்ன பதிலிலேயே சதுப்பு நிலக் காடுகளைப் பற்றிய செய்தியினையும் சொல்லியிருக்கிறேன். கடற்கரைப் பகுதிகளில் மண் அரிப்பினைத் தடுக்கவும், பலத்த புயல் காற்றின் வேகத்தினைக் குறைக்கவும் சவுக்கு மரங்களைக் கொண்ட கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் (Shelter Belt) வளர்க்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, Shelter Belt திட்டத்தின் மூலமாக சவுக்கு மரங்கள் வரிசையாக வளர்க்கப்படுகின்றன. நிலத்தடி நீரினைப் பெருக்கவும், அருகில் உள்ள வேளாண்மை நிலங்களில் மழை நீரின் செறிவூட்டுத் திறனை அதிகப்படுத்தவும், காற்றின் வேகத்தினைத் தடுப்பதற்கும் அவை உதவிபுரிகின்றன.

முற்பகல் 10–05

மேலும், கடற்கரையோரக் கிராமங்களில் வாழும் மக்களின் வேலைவாய்ப்பினை அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களுக்கு எரிபொருள், தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் கிடைக்கவும் வழிவகை செய்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து, நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தை சூறாவளி காற்று மற்றும் இயற்கைப் பேரிடர்களிலிருந்து முழுமையாகப் பாதுகாத்திட காற்றாடி மரங்கள் என்று சொல்லக்கூடிய சவுக்கு மரங்கள் இல்லாத இடங்களில் சவுக்கு மரங்களை நடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, நிதி ஆதாரங்கள் அடிப்படையிலும், சவுக்கு மரங்கள் அங்கே வளர்வதற்குரிய சூழ்நிலைகளும் இருக்குமானால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட மணக்குடி பகுதிதான் இயற்கையாகவே mangrove காடுகள் அதிகமாக வளர்ந்திருக்கக்கூடிய பகுதி. மீன் வளத் துறையின் மூலமாக Eco Park அமைப்பதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அழகாக bunch bunch ஆக இருக்கக்கூடிய அந்த mangrove காடுகளில் மணலைக் கொட்டி மணல் மேடாக மாற்றி, அதில் boat jetty அமைக்கக்கூடிய பணியைச் செய்து வருகிறார்கள். Mangrove காட்டை உருவாக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது. இன்றைக்கு boat jetty அமைப்பதற்காக இயற்கையாகவே வளரக்கூடிய mangrove காடுகளை அழிக்கக்கூடிய பணி நடைபெற்று வருகிறது. Mangrove காடுகள் இருக்கின்ற காரணத்தால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும்; மழை வருவதற்கு வாய்ப்பாக

*2020 பிப்ரவரி 18]*

இருக்கும்; இயற்கைச் சீற்றத்தையும் நம்மால் தடுக்க முடியும். எனவே, பல்வேறு வகைகளில் நன்மைபயக்கக்கூடிய mangrove காடுகளை அழிக்கக்கூடிய பணிகளை நிறுத்துவதற்கு வனத் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அழிந்துபோன மரங்களுக்குப் பதிலாக, அந்த மணல் மேடுகளையெல்லாம் அகற்றிவிட்டு, புதிதாக mangrove மரங்களை நடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் குறிப்பிட்டபடி, mangrove காடுகள் எனப்படும் சதுப்பு நிலக் காடுகள், அதிக உப்புத் தண்ணீர் உள்ள கடற்கரை ஓரங்களிலும், அதிக வலுவான அலைகள் இல்லாத கடற்கரைப் பகுதிகளிலும், சாதாரண சீதோஷ்ண நிலை உள்ள குளிர்காலத்தில் 20 சென்டிகிரேட்டுக்கு குறையாத வெப்ப நிலை உள்ள பகுதிகளிலும் வளரும். சதுப்பு நிலக் காடுகள் தரைப் பகுதிக்கும், கடற்கரை சூழலுக்கும் ஒரு பாலமாக அமைகிறது. சதுப்பு நிலக் காடுகள் மீன்கள் இனப் பெருக்கத்திற்கும், மீன் குஞ்சுகள் வளர்வதற்கும் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. இவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டிருந்தது சபையினருக்குத் தெரியும். ஆனால், எதிர்பாராத சுனாமி மற்றும் இயற்கை பேரிடர்களின் காரணத்தால் அது அழிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடத்தினைப் பாதுகாப்பதற்குரிய சூழ்நிலைகளை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்து சென்று, அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*